19 NOV 2010

சுருக்கம்

புராதன நகரம் – திருவள்ளூர் நகரம் – புராதன / பாரம்பரியமிக்க நகரமாக அறிவிப்பு செய்யப்பட்டது – நகர் ஊரமைப்பு வாரிய வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.50.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது – மாற்றப்பட்ட பணிகளுக்கு உரிய நிர்வாக அனுமதி வழங்குதல்–ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ4(2)) துறை

அரசாணை (நிலை) எண்.247 நாள்: 12.11.2010

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.286, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.12.09.2007.
2. நகர் ஊரமைப்பு இயக்குநரின் கடிதம் ந.க. எண்.2522/04, யுபி1, நாள் 06.04.2010.

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் திருவள்ளூர் நகரத்துக்கு புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நகர் ஊரமைப்பு வாரிய வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டது.

2. தற்போது மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநர், திருவள்ளூர் புராதன திட்டப் பணிகள் மேற்கொள்ள உறுப்பினர் செயலர், நகர் ஊரமைப்பு வாரியக் குழு மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயலாணை மூலம் ரூ.50.00 இலட்சத்திற்கு கீழ்க்கண்ட 6 பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி விடுவிப்பு வழங்கப்பட்டது என தெரிவித்துள்ளார்.

| வரிசை எண் | பணியின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கிழக்கு குளக்கரைத் தெருவில் ச.எண்.472 பகுதியில் கட்டணக் கழிப்பிடம் கட்டவும் மற்றும் துயில் கூடம் அமைக்கவும் | 27.00 |
| 2. | திருத்தணி தேசிய நெடுஞ்சாலை எண்.205 நகராட்சி எல்லையில் டோல்கேட் அருகில் அலங்கார வளைவு அமைக்கும் பணி | 2.40 |
| 3. | ராஜாஜிபுரம் தந்தை பெரியார் தெருவிற்கு தார் சாலை அமைக்கும் பணி | 10.00 |
| 4. | வடக்கு ராஜா தெருவிற்கும், பஜார் தெருவுக்கும் மழைநீர் வடிகால் அமைப்பதற்காக | 5.00 |
| 5. | வடக்கு ராஜா தெருவிற்கு தார்சாலை புதுப்பிக்கும் பணி. | 3.50 |
| 6. | பஜார் தெருவிற்கு தார்சாலை புதுப்பிக்கும் பணி | 2.10 |
| | மொத்தம் | 50.00 |

3. மேற்காணும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட ஆறு திட்டப்பணிகளில் வரிசை எண்.1-ல் குறிப்பிட்டுள்ள கட்டணக் கழிப்பிடம், யாத்ரீகர்கள் தங்கும் வசதி கட்டடம் தேவஸ்தானம் சார்பில் கட்டப்பட்டுள்ளது என்றும், சென்னை–திருப்பதி தேசிய நெடுஞ்சாலை அகலப்படுத்தும் பணி விரைவில் துவக்க உள்ளதால், வரிசை எண்.2-ல் உள்ள அலங்கார வளைவு அமைக்கும் பணி சாத்தியமற்றது மற்றும் தற்போதைய விலை விகிதத்தின்படி மேற்கொள்ள இயலாத சூழ்நிலை உள்ளது என்றும் மேலே வரிசை எண். 3 மற்றும் 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணி துவக்கப்படவில்லை என்றும் வரிசை எண்.5 மற்றும் 6–ல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பணிகள் 2006–2007 சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

4. திருவள்ளூர் புராதன நகரமாக அறிவிப்பு செய்யப்பட்டு ரூ.50.00 இலட்சத்துக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதிவிடுவிப்பு செய்யப்பட்டுள்ளதாலும், கீழ்க்காணும் மாற்றுப்பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை ஆகியோரின் பரிந்துரை பெறப்பட்டுள்ளதாலும், கீழ்க்கண்ட பணிகளை அப்பணிகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீடுகளின் படி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்குமாறு நகர் ஊரமைப்பு இயக்குநர் அரசின் ஒப்புதலைக் கோரியுள்ளார்.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தந்தை பெரியார் சாலை முதல் பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயில்வரை கப்பி சாலை மற்றும் சாலையின் மையப் பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி. | 38.00 |
| 2. | தந்தை பெரியார் சாலையில் மையப்பகுதியில் தெருவிளக்கு அமைக்கும் பணி | 12.00 |
| | மொத்தம் | **50.00** |

3. அரசு, இந்நேர்வை நன்கு ஆராய்ந்து, நகர் ஊரமைப்பு இயக்குநரின் கருத்துருவை ஏற்று, திருவள்ளூர் புராதன நகரத்திற்கு, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.50.00 இலட்சம் நிதியினைக் கொண்டு கீழே குறிப்பிட்டுள்ள இரு மாற்றுப்பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசு இதன் வழி ஆணையிடுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தந்தை பெரியார் சாலை முதல் பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயில்வரை கப்பி சாலை மற்றும் சாலையின் மையப் பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி. | 38.00 |
| 2. | தந்தை பெரியார் சாலையில் மையப்பகுதியில் தெருவிளக்கு அமைக்கும் பணி | 12.00 |
| | மொத்தம் | **50.00** |

5. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் (அ.சா.கு. எண்.63997/Hg/10, நாள் 08.11.2010) வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அசோக் டோங்ரே
அரசுச் செயலாளர்

பெறுநர்:
இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், சென்னை–2.
ஆணையர், திருவள்ளூர் நகராட்சி, திருவள்ளூர்.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம்.
திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சித் தலைவர், திருவள்ளூர்.
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு.
நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர், செங்கல்பட்டு.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
தனிச் செயலாளர், வீ.வ (ம) ந.வ துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (செய்தி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித்(வீ.வ.)துறை, சென்னை–9.
நகர நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வளர்ச்சித் துறை, சென்னை–9
இ.கோ/கூ.ந

// உத்தரவுபடி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

15/11/10